DUPLICATE

புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது

இந்துசாதனம்.

விரோதிகு (1889) ஆவணி மீ உஉ உ ஆரம்பமானது.

பத்திரக் கிரயம்.
யாழ்ப்பாணப்பட்டினம் ஞாயிற்றுக்கு ரூ. உ-அ0
வெளியூர், இந்தியா: „ ரூ. ச-க0
தொலைப்பகுதி: „ ரூ. ச-க0
தனிப்பிரதி சதம் ௧.
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

THE HINDU ORGAN.

குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

விளம்பர விகிதம்.
முதன்முறைக்கு:—ஒருகலம் ரூ. க-௪0
„ அரைக்கலம் ரூ. ௫-00.
„ காற்கலம் ரூ. ௩-00
„ ஒருஅர்கலம் -கஅ
அதிகமுறைகட்கு தனி விகிதங்களிற் பார்க்க.
விளம்பரங்கள் முற்பணமனுப்பினுன்றி வெளியிடப்படா.

புத்தகம் ௩ ௩௨. } யாழ்ப்பாணம்:—துர்மதிஞு சித்திரைமீ உ௩உ, ௧௩உ௧ ம்அ௯ மேமீ ௫உ. { இலக்கம் ச0

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மந்த ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் நினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப்பிரானுர்தந்த
வார்பூத்த வறிவிச்சைதொழிலென்றேது
மதர்பூத்த விராயன்றன் வணக்கிகழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ராவினம்
வீழ்க தண்புவல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

சாலாமிஸ்ரி லேகியம்.

1.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தகா, பீதானு சாலாமிஸ்ரி, சப்பேத் முஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, வாதாம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், ஆபரகபஸ்பம், வங்கபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகளை சேர்த்துச் செய்யப்பட்டிருக்கிறது. இதனால் நீரிழிவு, வெள்ளை, நீர்மாவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு ஒருவருஷத்துள் உண்டாகிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தநாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்கால்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரிகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டவேந்தால், மேற்சொன்னவியாதிகள் சுகமானதுடன் சுதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள், பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின்விலை இருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0 அரைஞாழுதனுக்கு ரூபா ௧0. கால் ஞாழுதனுக்கு ரூபா ௩. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர், பினங்கு முதலிய தொடுவாய் இராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினுல் முன் மணி யுடன் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ வெஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
இல. 91 முதல் மருதானை, கொழும்பு.

இரவில் மணி பார்க்கும்
8 மூலை ரேடியம்
ரிஸ்லெட் கெடியாரம்

8 மூலைகளிலும் ரிஸ்லெட்டுகளும்

மூலை இல்லாத ரவுண்டுரிஸ்லெட்

ரூபா 1 0 0

ரூபா 0 8 0

செவ்வாரம் 1-க்கு செவ்வாரம் 1-க்கு

செட்டால், சிங்கப்பூர், மோரீஸ் முதலிய தேசங்களுக்கு முற்பணமில்லாமல் வி. பி. யில் அனுப்பமுடியாது.

டி. சி. நாகலிங்கப்பா அண்டு கோ.
பார்க்டவுன் போஸ்டு,
(Y. 2.) மதராஸ்.

அசாதி ரோகங்கட்குப்
பிரத்தியக்ஷ அவுஷதங்கள்.

[நமது மருந்துகளின் குணங்களை அநேக ஜனங்கள் அறிந்திருப்பதால் அதிகம் சொல்லத் தேவையில்லை.]

காமவிலாச லேகியம்
அல்லது
சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்து பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் நன்மை சுகம் முதலியவைகளை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்பொழுது இந்த லேகியத்தை பிரசுரித்துவருகிறேன். இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தகா, பீதானு சாலாமிஸ்ரி, சப்பேத் முஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, வாதாம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், ஆபரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகளை சேர்த்துச் செய்யப்பட்டிருக்கிறது. இதனால் நீரிழிவு, வெள்ளை, நீர்மாவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒரு வருஷத்துள் உண்டாகிருக்கும் அடைவாய்வு, இருமல், காசம், பித்தநாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் கால்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரிகள் இந்த லேகியத்தைச் சாப்பிடுவதால் சூதகவாய்வு பிரசவ அறையில் உண்டாகும் பல நோய்கள் தீர்ந்து பால் விர்த்தி செய்து தேகத்திற்குப் புஷ்டியையும் பலத்தையும் தரும்.

இருத்தல் ஒன்று விலை ரூபா 20. கால் இருத்தலுக்கு குறைவு அனுப்பப்படமாட்டாது.

கஸ்தூரி திராவகம்.

இந்தத் திராவகத்தில் ஒருநோத்திற்கு நான்கு சொட்டுவீதம் ஒரு ஔன்சு ஸ்ஜலத்தில் விட்டு எப்பேர்ப்பட்ட நீரழிவினால் தாங்கமுடியாத வருத்தமும் மூன்றுவாரியில் சுகம் தெரியும் 40 நாளாகும். தருணவயதுள்ளவர்களுக்கு உண்டான பக்கவாய்வு, துர்மடையால் புதுநடைத்தியத்து வரமும் பிரதான காரியம் பூர தாம்பிரபஸ்தரை மும் வெற்று உபயோகிக்கவேண்டியது. இன்னும் ஷை திராவகமானது இருமல், மூலச்சூடு, காசரோகம், தமிர காட்சேன்ற வாதரோகம், நிலைகால்தல், மூலைப் பலவீனம், ஞாபகசக்தி குறைவு, கண்புலச்சல், பார்வைக்குறைவு, காட்சென்ற பிரமேகம் இவைகளுக்குக் கைகண்டபம், அப்ரக்பஸ்பம், சாம்பிராணிப் பதங்கம், வேறு மூலிகைகளைஞ்சேர்த்து திராவகம் கடித்து வைத்திருக்கிறேன். இந்த மருந்தைக் கொடுத்து அநேக பிணியாளிகளைச் சுகப்படுத்தி விவையுயர்த்த வெகுமதிகளும் பெற்றிருக்கிறேன். இப்போது எல்லாருடைய பிரயோஜனத்திற்காக சொற்ப லாபத்திற்கு வெளியே பிரசித்தம் பண்ணியருளிறேன். இந்த ஔஷதம் பித்தபாண்டு, மகோதரம், சுவாசகாட்டி, வயிற்றிலிருக்கும் துர்நீரானுக்குக் கைகண்ட ஔஷதம்.

20 நாளைக்குச் சாப்பிடக்கூடிய தூளை ஒவ்வொன்றுக்கு விலை ரூபா 10 இதற்குக் குறைந்து அனுப்பப்படமாட்டாது.

குஜிபங்க தைலம்.

விபத்து நேர்ந்த காலத்தில் ஓர் அருமையான மித்திரன் உதவிபோல் இந்தைலம், தேவைக்காகிய காலம்பிற் பூசவதால் அற்றுப்போன சக்தி திருப்ப உண்டாகும். ஒரு அவுன்ஸ்விலை ரூ 2-50.

மிருத்துஞ்ஜீவன அல்லது கஸ்தூரிமாத்திரை.

இம்மருந்தால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் சுகமடைந்திருக்கிறார்கள். அர்ச்சனிலி அநேகர் அதன் குணகுணத்தை எங்கும் கடிதமூலமாகவும் முகாமுகமாகவும் விபத்து புகழ்ந்துபேசியிருக்கிறார்கள். அன்றியும், எமது அனுபோகமாய்க் கொஞ்ச சன்னியால் முழுகியிருந்த அநேக வியாதியஸ்தர்களையும், இன்னும் அநேக மலேரியா முதலிய விஷக் காய்ச்சற்காரரையும் சுகப்படுத்தியுள்ளோம்.

எட்டுவிதமான சுரத்திற்கும், அசுத்த ஜலத்திலிருந்து உண்டுபடுகிற சுரமுதலான விஷஜ்வரரோக்கள் கடிகிறதினுலுண்டாகும் மலேரியா முதலான விஷக் காய்ச்சல்களுக்கும், பதினெட்டு விதமான ஜன்னிக்கும் இதில் ஒரு மாத்திரையை இஞ்சிச்சாறில் ஊறைத்துச் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட ஜன்னியும் ஒன்று தல்வது இரண்டுவேளை மருந்தில் குணந்தெரியும், பெரியவர்கள் 2 மாத்திரையும், சிறியவர்கள் 1 மாத்திரையும் எழுவேளை சாப்பிட்டால் ஜன்னி காய்ச்சல் முதலியன சுத்தமாய்க் காணும்.

12 குளிகைகளின் விலை ரூபா 2.

வீரிய ஸ்தம்பனக் குளிகை.

இது ஒரு தேவ ஔஷதம்.

[illegible]ஆண்மையிர்தம்போன்றவுஷ்ணத்தை உட்கொண்[illegible]ல் குரியவிரர்கள் கண்டதுக்காரம் நீங்கு[illegible]பால் அநேக வியாதிகள் சுகப்படுவதுமன்றி இந்தச் சுத்தி சரீரசக்தி கொடுக்கும் ஒரு தேவ ஔஷதம் இம்மருந்தின் வீரிகான குணங்களை அறிய விருப்புவோர் எமது கட்லாக்கைத் தருவித்துப் பார்த்துக்கொள்ளலாம். 12 குளிகை விலை ரூபா 2.

சங்கரக் குளிகை
அல்லது
மாதாந்த சுத்திசெய்க் குளிகை

மாதாந்தரம் மாதவிடாய் காணுல் நின்று போய் அதனுலுண்டாகும்வயிற்றுவலி, இடுப்புவலி, கைகால் உளைச்சல், கார்தல், மண்டைவலி, திமிர், கண்காக்தல், பார்வைக்குறைவு, பெலவீனம், தூஷணம், ஒவ்காமை, நெஞ்சு எப்பம், கட்டிகாய்வு, மலச்சிக்கல், மூலச்சூடு, சிலருக்கு மாதவிடாய்காணுமலும், சிலருக்கு அதிகமாகவும், சிலருக்குச் சொற்பமாகவும், சிலருக்கு மாதவிடாயுடனாகமுன் வயிற்றுவலி முதலிய நோய்கள் கண்டு இடைவிடாதுவரத்துக்குள்ளாகிறார்கள். இவ்வியாதி இலட்சணங்களை இன்னும் மேலதிகமாய் அறிய விருப்புவோர்கள் எமது கட்லாக்கைத் தருவித்துப் பார்த்துக்கொள்ளலாம். 21 நாள் சாப்பிடக்கூடிய 42 குளிகை விலை ரூபா 5.

இரசமணி.

அலைஞாணிற் சேர்த்து இடுப்பில் கட்டிக்கொள்ளக்கூடிய பெரிய மணியின் விலை ரூபா 3, அணு 8. சிறியமணியின் விலை ரூ 1, அணு 8. தபாற்செலவு பிரத்தியேகம். இந்த மணி இடுப்பிலிருந்தால் பேய், பிசாசு, குளிர்பம், சொப்பனம், முதலியவை அருகில்வரமாட்டா. மேலும் அநேக விதமான வாய்வு, பிரமேகம், நீர்க்கடுப்பு, பீனிசம், வயிற்றுவலி முதலிய நோய்கள் தீரும்.

நதகஜகேசரி.

சொறிக்காரப்பன், அதாவது சொறித்தேமல், சொறிரெங்கு, சொறிக்குஷ்டம், சரீரத்தின் தோலில் தடிப்பேறிய சருகுகுஷ்டம், போர்சிர்கால், அதாவது யானைக்காலிலு கெடிப்புண்டாகி அதிலுண்டாகும் புழுக்களுக்கும் இன்னும் தோல் சம்பந்தமான வியாதிகட்கும் கைண்ட களிப்பு. இக்களிப்பு என்னும் பூச்சுமருந்து, சொறிக்கரப்பன் அல்லது சொறித்தேமலுக்குப் பூசினுல் 2 நிமிஷத்திற் குணங்காணலாம். 8 நாட்களில் பூர்த்தியாய் சுகமடைவர்கள். மேற்சொல்லிய மற்றும் வருத்தங்கட்கு லொன் பரவித்துவை சுகங்கிடைக்கும். விலை 1 டின் சதம் 50 முழுடின் ரூபா 1.

மேற்கூறிய மருந்துகள் யாவற்றிற்கும் தபாற்செலவு பிரத்தியேகம். தெடொப்பு இராச்சியங்கட்கு வி. பி சட்டமோச்சட்டம் இல்லாததால் மருந்து தருவிக்க விரும்புவோர்கள் முற்பணம் அனுப்பவேண்டியது.

எம். கெங்காப்பிரசாத் பண்டிதர்,
ஆதி ஆயுர்வேத ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
63 ம நம்பர், முதல் மருதானை,
கொழும்பு

☞ மருந்துகளுக்கு எழுதும்போது இப்பத்திரிகையையுங் குறிப்பிடுக. Y 4

தனலக்ஷ்மி
சில்க் சேலைகள்.

Q. 10.

கலியாணச் சடங்கு முதலிய விசேஷங்களிற் பாவிக்கக்கூடியதும், இந்தியாவில் இந்தியர்களால் தயாரிக்கக்கூடியதும், புதுமாதிரியானதும், கெட்டிச் சாயமுமுள்ளது. உடை அழகுமானதும், உடல் பூராவும் பலவிதமான பூவேலைகள் செய்ததும், மென்மை வாய்ந்ததும், சதமான முழுமுடியான பட்டுச் சேலை.

எல்லா நிறங்களிலும் இருக்கின்றன.

7 கஜம் சேலை 1 ரூபா 27—0—0.
7½ கஜம் சேலை 1 ரூபா 30—0—0.
8 கஜம் சேலை 1 ரூபா 35—0—0.
9 கஜம் சேலை 1 ரூபா 40—0—0.

ஒரே தடவையில் 6 சேலைகள் வாங்குகிறவர்களுக்கு 100 ரூபா ஐந்து வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

தனலட்சுமி கதேச ஜவுளி மனிகை,
19, அம்மன்சன்னதி,
மதுரை,
தென் இந்தியா.

Tel. Address: "Murabari", Madura, (S. INDIA.)

சமரச போதினி.

இஃதொரு தமிழ் காரப் பத்திரிகை. நஞ்சையா கலிரின்றும் பிரதி புரன்கிழமைதோறும் வெளிவருகிறது. தமிழ் நில்லர்களில் எங்கும் சுதந்தர தாகத்தை எழுப்பிச் சிவிம் இந்தியர்கள் பூரண சுய ஆட்சி பெறுவதற்கு நியாயங் கொச்சிசெய்வதே இதன் முதிய நோக்கம் இந்தியர்களுடைய சுதந்தரத்தைப் பாதுகாப்பது இதன் முதல் விரதம். பிராமணர்களின் குறைகளை நீக்கி ரோமத்தைச் சீர்திருத்தும்படி செய்வதும் அதற்கு வழிகளைக் காண்பிப்பதும் இதன் வேலை இப்பத்திரிகையில் யாவராயிருந்தாலும், நியாயம் தவறினும் இந்தியர்களுடைய லட்சியத்திற்கு விரோதமாவும் போவார்கள் இடைநிலினின்று ஈவு இரக்கமின்றிக் கண்டிக்கப்படுவார்கள். வகுப்பு, ஜாதி, மதம் முதலிய பேதங்களைக் குறைத்து இந்திய சனசமூகத்தை நிர்யாணிப்பது இப்பத்திரிகையின் லட்சியம். இதற்கு வருஷ சந்தா தபால்கூலி யுள்பட ரூபா ஐந்து ஆறுமாசத்திற்கு ரூபா மூன்று. வெளிநாடுகளுக்கு ரூபாஎழு, தேசமுன்னேற்றத்திற் கவலையுமான வல்லா விஷயங்களுக் தெளிவாகவும் தரியமாகவும் எழுதப்படும். மாதிரிப்பத்திரிகை அனுப்பப்படும்.

இ. குரிய நாராயண ஐயர் பி. ஏ; பி. எல்;
பத்திராதிபர்,
"சமரசபோதினி" தஞ்சாவூர்.

மிக்க உபயோகமுள்ள
தமிழ்ப் புஸ்தகங்கள்.

பத்திவிளக்கம் (ஈசுவராதிகள்பலவும்)	0-12-0
தத்துவஞானபோதம் (வேதாந்தம்)	0- 8-0
கந்தபுராணவசனச்சுருக்கம்	0- 8 0
குமாரஉதயம் (ஸ்கந்தர் விதயம்)	0- 6-0
மஹாத்துமாக்கள (ஈசுராம்சன்)	0- 4-0
சூம்பரோணம் தரவணக்கம் (யாத்திரை வாரின் வழிநாடி)	0- 3-0
மஹாமஹோத்சவவைபவம்	0- 3-0
கர்ணன் (யொரிபெற்றகொடையாளி)	0- 2-0

மர்னவிலாச புஸ்டிப்பேர,
(M. 11) கும்பகோணம்.

சொய்சா ஞாபக
பிரசவ ஆசுபத்திரியில்
செற்பிளிகள வைத்தியசாலை.

G. 95.

சொய்சா ஞாபக பிரசவ ஆசுபத்திரியிலே இல்லாதவர்களுக்காக ஒரு செற்பிளிகள் வைத்தியசாலை 1921-ம் ஆண்டு மேமீ 1-ம் திகதிப்படி. செல்வாய் வியாழக்கிழமைகளில் காலைநேரம் 8-மணி தொடக்கம் 4-மணி வரைக்கும் பிரசவ ஆசுபத்திரி பெரிய டக்டர் அவிடத்தி லிருந்து செற்பிளிகளுக்கு அவர்கள் கவனிக்கவேண்டிய சுகாதார ஒழுங்குகளைப் பற்றிச் சொல்லுவார்.

விளம்பரம்.

மெடிக்கல் டிப்பாட்மென்றைச் சேர்ந்த ஒப்பந்தங்கள்.

G 96.

1921-ம் ஆண்டுப்பிரீ 1வ தொடக்கம் ஒருவருடத்திற்கு யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, பருத்தித்துறை, கவளியா, பலப்பிட்டியா, தெனியாய, அம்பாந்தோட்டை, தங்காலை, ரிசமகுடா, காலி, நுவரெலியா, என்னுமிடங்களிலேயுள்ள அரசாட்சியாரின் ஆசுபத்திரிகளுக்குத் தேவையான தின்சாமான்களைக்கொடுக்க ஒப்பந்தம்பண்ண விரும்புவோர் சேன்விக் தொரிசன் அனுப்பலாம்.

சேன்விஸ் பிரதான சிவில்மெடிக்கல் ஆபீசரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அர்க்கம்பொரிசனில் எழுதப்பட்டு ஒப்பந்த விசாரணைக்கு தேரில் 1921-ம் ஆண்டு மேமீ 7வ மத்தியானம் 12 மணிக்குமுன் சேரவேண்டும். அந்தோரத்தக்குப்பிச்திய சேன்விக்தொரிசன் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

மற்றும்விபரக்களுக்குக் காசுப்பத்திரிகையைப் பார்க்கவும் அல்லது பிரதான சிவில்மெடிக்கல் ஆபீசரிடம் எழுதிக்கேட்கவும்.

நமது பத்திரிகாபிமானிகட்கு ஒரு விசேஷ விஞ்ஞாபனம்.

அபிமானம் பூண்ட அன்பர்காள்!

இவ்விந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரகாரங்களின் பொருட்டுத் தங்களால் வரவேண்டிய கிரயத்தை அறவிதேற்கும், புதிய பத்திராபிமானிகளைச் சேர்த்தற்கும் அதிகாரங் கொடுத்து யாழ்ப்பாணம் இந்துக்கல்வாரித் தமிழ்ப் பண்டிதரும், இந்துசாதனப் பத்திரிகாசிரியருமாகிய ஸ்ரீமான் சே. திருஞானசம்பந்தப்பிள்ளையவர்களை அனுப்புகின்றோம். இவர் வடமாகாணம் கீழ்மாகாணம் என்னுமிரண்டு மோழிந்த ஏனைய மாகாணங்கட்குச் செல்லுவர். ஆதலால் பத்திரிகாபிமானிகளாயுள்ள நீவிரனைவரும் அவர் உங்களிடம் வருஞ் சமையத்தில் உங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தை முற்றாகக் கொடுத்து அவர் சரும் பற்றுச்சீட்டையும் பெற்றுக் கொள்வதுடன் புதிய அபிமானிகளையுஞ் சேர்த்துக் கொடுத்து இன்னும் ஆகவேண்டிய வசதிகளையுஞ் செய்வீர்களென எதிர்பார்த் திருக்கின்றோம்.

யாழ்ப்பாணம்
இ. சா. ஆபீஸ்
7—4—21.

இங்ஙனம்,
தங்களன்பன்,
ச அம்பிகைபாகன்,
இந்துசாதன மானேஜர்.

இந்துசாதனம்

வாழ்ப்பாணம்:—தூர்மதிஞு சித்திரைமீ உகவ.

சமயக்கல்வி.

"செல்வத்துட் செல்வம் கல்விச்செல்வம்" என்பது உலகத்துள்ள எல்லாச் சாதியாராலும் ஒத்துக்கொள்ளப்பட்ட தொரு சத்தியம். இச்சுச் சத்தியம் பிரசித்தியுறுத தேசமேயில்லை. இதன் பிரசித்திகாரணமாக "கல்வியல்லது செல்வமில்லை" என்னும் வாக்கியம் இந்தக்காலத்திலே உலகத்திலே எங்கெங்கும் வலியுறுத்தப்படலாயிற்று.

கல்வியிற் பெருஞ் சிறப்பைநோக்கியே, இந்தக்காலத்திலே எங்கெங்கும் கல்வி விருத்திக்காகப் பெரு முயற்சிகள் செய்யப்பெறுவாயின. உலகத்துள்ள இராச்சியங்கள் எல்லாம் அரசிறைவருவாயின் பெருந்தொகைப்பொருளைக் கல்வி விருத்திக்காகச் செலவிடுகின்றன. தனவந்தர்களும், கோடீஸ்வரர்களுமாகிய செல்வர்களுட் பலர்தங்கள்பொருள்களைச் சிறிதாவது உலோபமின்றிக் கல்வியின் விருத்திப்பொருட்டாக வாரி வாரி இறைக்கின்றார்கள்.

ஆனால் இந்தப் பெருமுயற்சிகள் எல்லாம் லௌகிகக் கல்வி விருத்திப்பொருட்டாகச் செய்யப்படுவனவன்றி, சமயக் கல்வி விருத்திப்பொருட்டாகச் செய்யப்படுவன என்று சொல்லத்தக்கவல்ல. மேலைத் தேசங்களிலே சமயவிருத்திப் பொருட்டாக வருடந்தோறும் பெருந் தொகைப் பொருள் செலவிடப்படுவதுண்டாயினும், அந்தச்செல்வு சமயவிருத்திப்பொருட்டாகச் செய்யப்படுவதென்று சொல்லுவது கூடாது. தங்கள் சமயத்தை உலகெங்கும் விருத்திசெய்துவிடுதல் வேண்டுமென்னும் வேணவாத் தூண்டமேலைத்தேசவாசிகள் கோடிக்கணக்காகப் பொருளைச் செலவிடுகின்றார்களல்லாமல் சமயக்கல்வியை விருத்திசெய்துவிடுதல் வேண்டும் என்னும் விருப்புத்தூண்டத் தமது பொருளைச் செலவிடுகின்றார்களென்று சொல்லுவது கூடாது. ஆயினும், அவர்கள் சமயக்கல்வியிருத்தியை ஒருங்கே பராமுகம் செய்கிறார்களென்று சொல்லுவதுக்கூடாது. இதன்பொருட்டும் அவர்கள் ஒருதொகைப்பொருள் செலவிட்டுக் கொண்டே வருகின்றார்கள்.

எங்கள் தேசத்திலே சமயக்கல்வி சிறிதாவது பொருட்படுத்தப்படுவதாக எமக்குப் புலப்படவில்லை. சமயக்கல்வி இல்லையாயின், லௌகிகக்கல்வி எமக்குப் பயன்படுமாறில்லை என்பதை நாம்மவர் எல்லாரும் ஒத்துக்கொள்வர். இதுபற்றியே நம்மூர்ப் பிரபுக்கள், எங்கள் சிறுவர்களுக்குக் கல்வியபிற்றுமுறையிலே பெரிதுஞ் சிரத்தைஎடுத்து, அவர்களைக் கிறிஸ்தவ பாதிரிமாருடைய பள்ளிக்கூடங்களில் கற்கவிடுதலால் எம்தம் பாலவாயின பெருங் கேடுகளைக் கண்டு அங்கங்கே, எங்கள் சாதி ஆசாரத்தை அனுசரித்துக் கல்வி பயிற்றுதற்கமைந்த பல கலாசாலைகளைத் தாபித்து நடாத்துவாயினர். எந்தெந்தச் சாதி ஆசாரமும் அவ்வச்சாதிக்குரிய சமயக் கல்விவாயிலாகவே பயிற்றப்படுதல் வேண்டும் என்பது விவேகிகள் எல்லாம் பூரணமாக ஒப்புக்கொண்டதோருண்மையாகும். ஆகவே, எங்கள் சாதியாசாரத்தின்வழி நாம் லௌகிகக்கல்வியை எமது சிறுவர்களுக்குப் பயிற்றவேண்டுமானால் எங்கள் சமயக்கல்வியை நாம் சிறிதாவது சேர்வுறவிடாது பயிற்றுதல்வேண்டும். இங்ஙனம் நாம்பயிற்றுவதுண்டோ என்று கம்மைஒருவர் கேட்பாராயின், நாம்இறுக்கத்தக்க விடை யாதாகும் என்பதை நாம் சொல்லிக்காட்டவேண்டா. சமயக்கல்வியின் பொருட்டு அரசினர் யாதொரு கன்கொடைப் பணமும்உதவாமையினால், நாம் சமயக்கல்வியைப் பராமுகம்செய்தல் முறையாகாது. நாம் அங்ஙனம் பராமுகம் செய்வதுண்டானால் ஆதியிலே கலாசாலைகளைத் தாபித்தற்பொருட்டுநாம்கொண்ட உத்தேசமே தவறிவிடும்.

சமயக்கல்விகள் அனைத்தினும், எங்கள் குருத்துவத்துக்கும் வேண்டப்படும் கல்வியே எமக்கு இப்போது பெரிதும் வேண்டப்பட்டுக் கிடக்கின்றது. எங்கள் குருக்கள்மார் ஒழுங்குறக்கற்று ஒழுங்குற எங்கள் சமயக்கிரியைகளை நடத்தாராயின், நாம் எவ்வளவு முயன்றும் எமதுசமயம் அபரபக்கச் சந்திரன்போலாய் மழுங்குறுவிடும் என்பதில் தடையில்லை. எங்கள் குருக்கள்மாருடைய தற்கால நிலையைச் சிந்திக்குமிடத்து, இன்னும் சிலகாலத்தில் இவர்கள் ஒருங்கே இல்லாதொழிந்துவிடுவரோஎன்று அஞ்ச வேண்டிக் கிடக்கின்றது. எமது தாய்நாடாகிய இந்தியாவிலே எங்கள் குருவருளுத்தவராகிய பிராமணர் எல்லாம் உத்தியோகவாஞ்சை கொண்டு உலகமயக்கிலே அமிழ்ந்திச் சமயக் கல்வியையும் சமய அனுட்டானத்தையும் சமயக்குருத்துவத்தையும்பெரும் புறக்கடலிலே வீசிவிட்டார்கள். சிற்றூராகிய நமது இலங்கையும் இப்போது அவர்களையே பின்பற்றுகின்றது. இங்குள்ள பிராமணர் எல்லாம் இந்தக் காலத்திலே கோயிற் பூசையையும் புரோகிதத்தையும் சமயக்கல்வியையும் கைகழுவிவிட்டு இங்கிலீசு கற்றலினும், உத்தியோகம் பெறுதலினும், தொப்பி சப்பாத்து மாட்டிக்கொள்ளுதலினும் பெருமோகங் கொண்டு கொண்டார்கள். பூசகர்களாயும் புரோகிதராயும் அமைந்திருப்போர் தாமும், தமது தொழிற்குரிய கல்வியை ஒரு சற்றாவது சிரமமுறக்கற்பதில்லை. மந்திரமாவது, கிரியையாவது, பாவனையாவது அவருக்குக் கிஞ்சித்தேனும் பிழையறத்தெரியாது. அரிசி வாங்குதற்கும் பணம் பறித்தற்குமுரிய பழக்கத்தை மாத்திரம் அவர்கள் பயின்றுகொண்டார்களன்றிச் சமயக்கிரியைகளைச் சற்றாவது சிரமமுறச் செய்தற்கு அவர்கள் பயின்றுகொள்ளவில்லை. இன்னும் சில காலத்திலே இவர்கள் இப்போது பழியுள்ள பழக்கந்தானும் இல்லாதழிந்து, எங்கள் தேசத்திலே, கோயிற் பூசைக்கும் சிராத்தம் முதலியன செய்தற்கும் பிராமணர் கிடைப்பதரிதாய் வந்துவிடும் என்பதில் தடையில்லை. எங்கள் தேசத்திலே பெருந் தொகையான சைவாலயங்கள் உண்டு. இவற்றிலே நித்திய கைமித்தியங்கள் நடந்துவருதற்பொருட்டாக இலட்சக்கணக்கான பொருள் மூலதனமாக நியமிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலயங்களும் இவற்றுக்காக நியமிக்கப்பட்டுள்ள பொருள்களும் இன்னும் சில காலத்திலே பிராமணர் இல்லாதொழிந்தால் என்படும் என்பதை நமது சமயிகள் அனைவரும் சித்தசமாதானத்தோடு சிந்தித்தல் வேண்டும்.

லௌகிகத்துக்குரிய ஒவ்வொரு தொழிலையுங் எங்கள் சிறுவர்கள் சிரமமுறக்கற்றுக்கொள்வதற்காக அவ்வத்தொழிற் கல்வியிற் பாண்டித்தியம்பெற்ற ஆசிரியர்களை நாம் நியோகித்து, அவர்களிடத்தே நமது சிறுவர் எல்லாம் சிரத்தையோடு கற்றுத் தேறுதற்குரிய உபாயங்களெல்லாம் தவறாது செய்து வருகின்றோம். இந்த லௌகிகங்கள் எவற்றினும் மிகச் சிறந்ததும், இந்த லௌகிகங்கள் தமக்கும் இன்றியமையாது வேண்டப்படுவதுமாகிய சமயத்துக் குரிய கல்விவிஷயத்தளவிலே நாம் சிறிதாவது சிரத்தைகொள்ளாதிருப்பது, எங்கள் தமிழ்ச் சாதி விரைவில் குன்றிவிடுதற்கறிகுறியாகுமன்றி மற்றைப்படியாகாது.

எங்கள் லௌகிகக் கல்விப் பொருட்டாகச் சிற்றூராகிய நமது யாழ்ப்பாணத்திலே இந்துக்களாகிய நாங்கள் எத்தனையோ கலாசாலைகளைத் தாபித்து நடத்துகின்றோம். பெண் கல்வி விஷயமாகப் பிரபுதிலகராகிய ஸ்ரீமான். இராமநாதன் அவர்கள் பெருந்தொகைப் பொருள் செலவிட்டு எமக்கு ஒரு பெருங் கலாசாலையை உதவியிருக்கின்றார். இன்னும் அந்தப் பிரபு எங்கள் ஆண் குழந்தைகளுடைய கல்வி விருத்தியின் பொருட்டாகவும் ஒரு பெருங் கலாசாலையைக் கட்டி எழுப்புகின்றார். ஆனால் எங்கள் அருமருந்தன்ன சமயத்துக்குரிய குருத்துவக் கல்வியைப் பயிற்றி எங்கள் சமயத்தைத் தளரவிடாது விருத்திசெய்தற்பொருட்டாக ஒரு குருத்துவ கலாசாலையைத் தாபிக்க முயல்வார் ஒருவரையுங் காணோம். எங்கள் கோயில் மானேசர்மார் எல்லாம் திரண்டு ஒரு குருத்துவ கலாசாலையைத் தாபித்தல் கூடாதா? கோயிற் பொருள்களிற் சேடமாயுள்ளவை இந்தக் குருத்துவகலாசாலைப் பொருட்டன்றோ செலவிடத் தக்கன? கொழும்பு நகரத்துள்ள நமது யாழ்ப்பாணப் பிரபுக்களுள் ஒருவராவது இந்தப் பெரும் புண்ணியமாகிய குருத்துவ பாடசாலையைத் தாபித்து நடத்துதற்கு முற்படுவாராயின், அவர் இறவாப் பெரும் புகழ் படைத்திடுவரன்றோ? இராமநாதனாலே ஒரு பெண் பாடசாலையும் ஒரு ஆண் பாடசாலையும் எமக்கு உதவிப் பெரும் புகழ் படைத்தாற் போல, அருணாசலம்துரையாவது, இரத்தினசபாபதித் துரையாவது, ஞானசேகரத்துரையாவது, சொக்காநாத் துரையாவது, முதலியார் காராளபிள்ளையாவது, அல்லது விரவுஞ்சி விடப்பட்ட மற்றப் பிரபுக்களாவது எமக்கொரு குருத்துவ பாடசாலையை விரைவில் தருவார்கள் என்று நாம் பூரண நம்பிக்கையா யிருக்கின்றோம்.

கடவுள் வேண்டுவார்வேண்டியவாறீபவர்.

ஆன்மாக்களாகிய நமது புதல்வர் எது எதை விரும்புகின்றார்களோ அது அதைப் பிரசாதித்தருளுதல் எமது தந்தையாராகிய கடவுளுடைய திருவருட் குணமாம் ஒரு பிதா தனது மழலைக்குளவி எது எதை விரும்பிற்றோ அது அதை எவ்வாற்றானுந் தேடி அந்தப் பிள்ளைக்குக் கொடுத்து அதனை உவப்பித்தல் போல, எமது பரமபிதாவாகிய சிவபெருமானும் நாம் விரும்பிய விரும்பியபோகங்களை யெல்லாம் எமக்கு ஊட்டி எம்மை உவப்பிப்பர். ஆனால், பிதா பிள்ளைக்கு அது விரும்பிய பொருளைத் தேடிக் கொடுத்து அதனை உவப்பிக்குமிடத்து அப்பிள்ளை அப்போது உவப்புறுதலாகிய அந்த ஒரு பயனைமாத்திரமன்றிப் பின்னர் வரக்கடவதாகிய பயனை நோக்குவதில்லை. கடவுள் பின்னுக்கு விளைதற்குரிய பயனையும் நோக்கியே அவர் விரும்பிய போகங்களை ஊட்டுவர். இங்ஙனமாயின் பின்னுக்குக் கேடு விளைதற்குரியதொரு போகத்தை ஆன்மாக்கள் விரும்பும்போது கடவுள் ஊட்டுதல் அவருடைய காருண்ணிய முறையாகுமோ எனின், ஆம் என்க. எங்ஙனம் எனின், கடவுள் போகங்களை ஊட்டுவதெல்லாம் அவர்கள் அப்போகங்களைத்துய்த்து, அங்ஙனம் துய்த்தல்காரணமாகப் போக்கியப் பொருள்களாகிய பிரபஞ்சப் பொருள்களில் வெறுப்பு படைதற்பொருட்டேயாம். இவ்வெறுப்பு அவர்கள் அந்தப் பொருள்களை அனுபவித்தல் காரணமாகவே பெறப்படுதற்குரியதாகலின், பரமபிதாவாகிய நமது பெருமான், நாம் எமது பக்குவத்தளவாக விரும்பும்பொருள்களை எல்லாம் எமக்குக் காலம் வாய்க்குந்தோறும் ஊட்டி, அங்ஙனம் ஊட்டப்பெற்றனவற்றை நாம் உண்ணும்முறையால் எமக்கு அப்பொருள்களின்கண்ணே உவர்ப்புத்தோன்றச்செய்து, அந்த உவர்ப்புக் காரணமாக நாம்உலகத்தைப் படிமுறையாக வெறுத்துத் தமது திருவடிப் பேறாகிய தெவிட்டா அமிர்தத்தை நாம்நம்போதும் அருந்தும்படி செய்வர். பிரபஞ்சப் பொருள்கள் எல்லாம் மாயையில் நின்று தோன்றி அம்மாயையிற்றானே ஒடுங்குதல்பற்றி அழிதன்மாலையவாதலின், அவற்றாற் பெறப்படும் இன்பமும் அழிதன்மாலையதேயாம். இறைவனுடைய திருவடித் தாமரையில் நின்று சுரக்கும் பேரின்பம் மாயைக்கு அப்பாற்பட்டு என்றும் நிலையுதலுள்ளதோர் பொருளாதலின், அந்த இன்பம் நித்தியானந்தம் எனப்படும். இந்த நித்தியானந்த சுகத்தை ஆன்மாக்களுக்குப் பிரசாதிக்குமாறே, கடவுள் அந்த நித்தியானந்தத்தைத் தோன்றவிடாது மறைத்துக்கொண்டு நிற்பனவாகிய சிற்றின்பங்களை முற்ற ஊட்டி, அவற்றின்கண்ணே வெறுப்பைக் கிளர்த்தி, அந்த வெறுப்புக் காரணமாக நித்தியானந்தப் பொருளாகிய தமது திருவடிக்கண்ணே விருப்பையுண்டாக்குவர். பலிங்கினது சுபாவிகத்தைத் தம்பாற் கொண்ட ஆன்மாக்கள், யாதொருபொருளிற் பற்றுதலமைந்து நிற்றற்குரியனவன்றித் தாமே தனித்து நிற்கமாட்டா. அந்த ஆன்மாக்கள் பிரபஞ்சப்பொருள்களிற் கொண்ட பற்றுக் கழன்றிடவே, இறைவனுடைய திருவடித் தாமரையாகிய பெரும் பற்றைப் பற்றி நின்றிடுமென்க. இதுவே இறைவன் வேண்டுவார் வேண்டியவாறு ஈந்தருளும் பெருங் கருணைத் திறத்தின் உத்தேசமாகும்.

இங்ஙனமாயின் கடவுள் ஆன்மாக்களுக்கு அவரவர் கன்மத்தளவாக ஊட்டுவர் என்று சமயசாத்திரங்கள் சொல்வது எங்ஙனம் எனின், இந்தக் கன்மம் காரணமாகவே ஆன்மாக்களுக்கு விருப்புக் கிளர்வது; கன்மங் காரணமாகக் கிளர்ந்த விருப்பைப் பரங்கருணைத் தடங்கடலாகிய கடவுள் ஊட்டுமுதத்தானே, அவ்விருப்பையும் அவ்விருப்புக்குக் காரணமாக அமைந்துள்ள கன்மத்தையும் ஒழித்திடுவர் என்க.

ஆன்மாக்களிடத்தே தீயவிருப்புக் கிளருமிடத்துக் கடவுளே அவ்விருப்பை ஊட்டிவிட்டுத் தம்மால் ஊட்டப்பெற்ற அந்த விருப்பின்பொருட்டாக ஆன்மாக்களைத் தண்டித்தல் நீதியாமோ எனின், அவ்விருப்புக் கிளர்ந்த தெல்லாம் அந்த அந்த ஆன்மாவுடைய பக்குவத்தளவாகவேயாம். அந்தப் பக்குவம் திருத்தமுறுதற்குரிய உபாயம் அந்தப் பக்குவத்தளவாகக் கிளர்ந்த விருப்பை அனுபவித்தல் வாயிலாகவேயாகலின், முற்றறிவும் முற்றுத்தொழிலும் உடையராகிய நமது பெருமான் எங்கள் விருப்புகளைக் காலம் வாய்க்குந்தோறும் ஊட்டி எமது விருப்பைக் குறைத்துத் தமது திருவடி நாட்டம் எம்பால் உதிக்கச்செய்திடுவரென்க.

சமாச்சாரம்.

உப்பின் விலை யேறும்:—யாழ்ப்பாணத்தில் வேண்டிய உப்பு இம்முறை விளைவிக்கப்படமையினாலும் புத்தளத்திலிருந்து உப்பு இங்குத் தருவிக்கப்படுவது சந்தேகமாயிருத்தலினாலும் உப்பின் விலை அதிகமாகுமெனச் சொல்லப்படுகின்றது.

கோப்பறு:—இது கண்டியொன்று ரூபா-91 விதம் விலைப்படுகின்றது.

சம்பாஅரிசி.—சென்னை அரசாட்சியார் கரும ஆனி மாதம்வரைக்கும் இலங்கைக்குப் பதினாயிரம் தொன் முத்துச்சம்பா அரிசி கொடுக்கத் தயாராயிருக்கின்றார்களென்று அறியவருகின்றது.

ஊர்நெல் ஊரிசிந்தப் புகைராதக்கூலியில்லையாம்:—இந்த மேமீ 2-வ தொடக்கம் ஊர்நெல்லும் ஊரரிசியும் உணவின்பொருட்டுப் புகைராதலிய மின்றி எந்தப் புகைராதல்தானத்திலிருந்துவேறெந்தப்புகைராதல்தானத்திற்கும் கொண்டுபோகப் படலாமென அரசினர் விளம்பரம் செய்திருக்கின்றனர்.

நேரியநாட் கொண்டாட்டம்:—இக்கொண்டாட்டம் வருஷப்பிறப்புத் தினத்தன்று மாலை மூன்றுமணி தொடக்கம் யாழ்ப்பாணம் முற்றவெளியில் கொண்டாடப்பட்டது. உயரம் பாய்தல், நீளம் பாய்தல், ஓடுதல், ஓர்சுவட்டு வண்டிச் சவாரி முதலிய விளையாட்டுக்களிற் றிறமைகாட்டிய பிள்ளைகளுக்குப் பரிசளிக்கப்பட்டன. சமுகமளித்திருந்தவர்கள் சிற்றுண்டியருந்திக் களிகூர்ந்தார்கள். 5 மணியளவில் கௌரவ அ. சபாபதியவர்கள் அக்கிராசனராயமர, கூட்டம் ஆரம்பமாயது. இந்துக்கல்லூரிப்பிரதானாசிரியர் ஸ்ரீ. செல்வத்துரை, நியாயதுரந்தரர் ஸ்ரீ. ச. இளையதம்பி, ஸ்ரீ. ராசரத்தினம், ஸ்ரீ. குருசிங்கம், ஆசிரியர்கள் ஸ்ரீ. J. V. செல்லையா, ஸ்ரீ. சுப்பையா, பண்டிதர் ஸ்ரீ. பாணிக்கத்தியாகராசா, சண்பிரதிநிதிகளாதற்கு முற்பட்டவர்த ஸ்ரீ. ஆ. கனகரத்தினம், ஸ்ரீ. வை. துரைசுவாமி என்பவர்கள் அத்தினக் கொண்டாட்டத்திற்கேற்ப, கல்வி, தேசாபிமானம், மதாபிமானம், நடை உடை பாவனை முதலிய சிறந்தவிஷயங்களைப்பற்றி உபந்நியாசங்கள் செய்தனர். இரவு எட்டரை மணியளவில் கூட்டம் முடிந்தது.

இலங்கைப் புகைரதப் பதுதி:—இலங்கைப் புகைரதப் பகுதிக் கருமங்களை விசாரணை செய்யும்படி அரினரால் நியமிக்கப்பட்ட விசாரணைச் சங்கத்தவர் அகனால் விசாரணை செய்து மிகு திருப்தியடைந்திருப்பதாகவும் சில திருத்தங்கள் மாத்திரம் வேண்டுமென்பதாகவும் தெரிவித்தனர்.

திரிகோணமலைப் புகைரதவீதி:—இவ்வீதியின் வேலைவிருத்தியைப் பார்க்கும்படி கமுதேசாதிபதி ஆன்சுர் சென்று மீண்டனர்.

புதிய சட்ட நிருபண சபைக் கூட்டம்:—இலங்கைப் புதிய சட்டநிருபண சபைக் கூட்டம் வருகிற ஜூன்மீ 7-ந்உ செவ்வாய் கிழமை பின்பகல் இரண்டரைமணிக்குக் கூடுமெனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

சட்ட நிருவாக சபை:—புதிய சட்ட நிருவாக சபையின் அங்கத்தவர்கள் இன்னுமொரு வாரகாலத்தில் நியமனஞ் செய்யப்படுகெனச் சொல்லப்படுகின்றது. இப்பொழுது கண்டியின் அங்கத்தவர்கள் இருவரும், இந்தியர்களுக்கு ஒரு அங்கத்தவரும், மகமதியருக்கு ஒரு அங்கத்தவரும், பொதிய அங்கத்தவர்களைப் பெருதவர்களென்று தேசாதிபதியவர்கள் எண்ணுக் கட்சியாருக்கு மூன்று அங்கத்தவர்களுமாக 7-அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

ஓர் புதிய சமாதான நிதிவாள்:—சப்பிரிக்கோட் நியாயதுரந்தரரும் சொத்தாரிசுவுமாகிய ஸ்ரீ S. சப்பிரமணியமவர்கள் பருத்தித்துறைப் பகுதிக்குச் சமாதானநிதிவாளுக்கப்படிருகின்றனர். இவர் பருத்தித்துறை நியாயங்களத்தில் அரசுமுறை பொலிஸ்நிதிவாளுக வேலை பார்த்திருக்கின்றனர். இவ்வுத்தியோக நியமனம் இதனை யெதிர்கால வேண்டியிருந்த அவ்வூரார்க்குப் பெருமகிழ்ச்சியே.

தற்கொலை:—சென்ற ஞாயிற்றுக்கிழமை நாவடியிலே ஒரு பெண் தெனம் வாய்வலியென்று வருத்திய கணகளு லிடர்ப்பட்டுத் தன்னுயிடனு சென்று தனக்குள்ள தெனத்தைத் தருப்படிகேட்ட அவள் மறுத்ததனுல் இருகலேட் கொள்ளிபோல் வருத்தித் தன் வளவுக்குள் இருந்த கிணற்றுள் வீழ்ந்து தற்கொலை புரிந்தனளாம்.

காங்கேயன்துறைச் சாராயந் தவறணை:—வலிகாமம் வடக்குப்பகுதியி லுள்ளொரு நூற்றுக்கு எழுபதுபேர்வரையில் இத்தவறணையைக் கச் சம்மதங் கொடுத்தார்கள். அரசினரின் பிரமாணத்திற்கு இதுநிறிதுகுறைந்தமையால், சனங்கள் இத்தவறணையை நீக்கும்படி தோதிபதிக்கும் அரசாட்சிசெண்டருக்கும் மனுப்பண்ணினர். இவ்விஷயம் இந்தமீ 9உ மதுபான ஆலோசனைச் சங்கத்தில் யோசிக்கப்பட்டபோது சனப் பிரதிநிதி அங்கத்தவருள் ஒருவராகிய ஸ்ரீ முத்து வேலுப்பிள்ளையவர்கள் மாருக நின்றதனுல் வேதவறணை நீக்கப்படவில்லை. வலிகாமம் வடக்கில் வேறுதவறணைகள் ஒன்றுமில்லை. இச்சாராயத் தவறணையைவிலக்கவேண்டுமென்பது ஊரவர்களுடைய அபிப்பிராயம். விலக்கவேண்டுமென்று ஞாயக்காட்டி மனுப்பண்ணியவர் ஒருவருமில்லை. அங்கனமாகவும் இது விலக்கப்படாததற்குப் பேதிய நியாயந் தெரியவில்லை. ஆயினும் ஊரவர்கள் அனுகூல முண்டாகுங்வரையும் தடைப்பட்டு நிற்கமாட்டார்கள்.

மாதகல் இந்துவாலிபர் சங்கம்:—இச் சங்கத்து முதல்வருடாந்தக் கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் 7 மணிவரையில் மாதகல் தமிழ் வித்தியாசாலையில் நடத்தப்பட்டது. மாணவரும் சங்கத்தினரும் ஏனைய பெரியோர்களுமாக இருநூறு பேர்வரையிற் சமுமாயிருந்தனர். ஸ்ரீ. வ. சோமசுந்தர உபாத்தியாயரவர்கள் "மதுஇந்துவாலிபர் கடமை" என்ற விஷயத்தை இரண்டரை மணித்தியாலங்களாகக் கேட்போர் யாவரும் ஆனந்திக்குமாறு ஓர் சிறந்த உபந்தியாசத்தைச் செய்தார்கள், பின்னர் நவலி ஸ்ரீ. சி. தம்பையாபாத்தியார், ஸ்ரீ. க. வேலுப்பிள்ளை இவர்களாற் குறிப்புரை கூறப்பட்டபின் தேவாராராயணத்துடன் கூட்டம் நிறைவேறியது.

தேகவியோகம்.

புதுக்கோட்டை சம்ஸ்தானத்தில் வறுகோட்டீநியதியா யிருந்த ருயபகதர் சே. வை. நாமோதரம்பிள்ளை பி. ஏ. பி எல். அவர்களின் சகோதராகிய ஸ்ரீ சி. வை. சின்னப்பிள்ளை அவர்கள் சென்ற சனிக்கிழமை ஆனைப்பந்தியடியிலுள்ள தமது இருதத்தில் தேகவியோகமாயினரென்னும் செய்தி கேட்டு விசனமடைந்தோம். சின்னப்பிள்ளை யவர்கள் நெல்லைமாவட்டத்தில் நியமிக்கப்பட்டிருந்த உபாராச் சம்பளம் பெற்றவர். இவர் தமது பிற்காலத்தில் வீரகேசரிகதை, விஜயசேனம் முதலிய அநேக நூல்களை வெளிப்படுத்தியும் இரண்டு அநேக சங்கங்களில் அங்கத்தவராகச் சேர்ந்தும் தேசாபிமானியொருட்டு உழைத்தவர். இப்பெரியாரை இழந்து துன்புறும் இவர் சகோதரர், புத்திரன், ஸ்ரீ. தேவராஜன் அவர்களையும் மற்றையரையும் ஆற்றி கடவுள் நிருபை செய்வாராக.

கடிதங்களுக்கு விஞ்ஞாபனம்.

"ஆங்கிலக்கற்கும் தற்கால மாதர்களின்கதி" என்னும் விஷயம் எழுதியவர் யாரென்று தெரியாமையினுல் இடம்பெறவில்லை. [இ-ரா.ப-ர்]

கடிதம்.

சர்வகலாசாலைக்கல்லூரி.

முற்காலத்திலே தமிழ்க்கல்வி யானது ஆதீனங்களாலும் மடங்களாலும் சங்கங்களாலும் தமிழரசர்களின் பரிபாலனத்தின்கீழ் நன்கு விருத்தியடைந்திருந்தது. பின் நம்தேயமானது, அன்னியர்கைப்பட நியாயஸ்தலங்களிலும் சபைகளிலும் மற்றைய உத்தியோகஸ்தானங்களிலும் ஏழுந்தும்பாகை ஆரபாஷையாகியது; அதனுல் வித்தியாசாலைகளிலும் மற்றைய கல்வி பயிலிடங்களிலும் அரசபாஷையே விருத்தியடைந்தது. நமது பெண்பிள்ளைகளு ஆங்கிலங்கற்கத் தொடங்கினர்; இங்கிலீஷ் வித்தியாசாலைகளில் தமிழ் கற்பிக்கப்படவில்லை. உபாத்தியாயர்கள் ஆங்கிலபாஷையிற் செய்யப்பட்டன. 'தமிழ் எனக்குப் போகாது'' என்பது நாகரீகமாகக் கொள்ளப்பட்டது. இவ்வாறு தமிழ்ப்பாஷையானது நாளுக்குநாள் அருகிவருதலைக் கண்டபோவதாபிமானிகள் நெய்யத்தை நோக்கி இரங்தனர். அரசாட்சியாருக்கு முறையிட்டனர்; சனங்களுக்குப் புலப்படுத்தினர்; அதனுல் நமது பாஷை கிறிதுகிறிதாக விருத்தியடையது பெருகலிழ்சியே. இப்பொழுது பிள்ளைகள் தமிழ் மூன்றும் வகுப்பிற் கிற்கியெய்தியபின்பே இவ்வித்தியாசாலைகளில் சேரலாம். இங்கிலீஷ்வித்தியாசாலைகளிலும் 4-ம் வகுப்புத்தொடக்கம் எட்டாம் வகுப்புவரையும் தமிழ் கற்பிக்கப்படுகின்றது. பின்சென்ற இரண்டு மூன்றுவருடங்களாக கேம்பறிஜ், ஜூனியர், சீனியர் பரீக்ஷைகளுக்கும் தமிழ் ஓர் பாடமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அம்பட்டோர் வண்டன் சர்வலைசாலைப் பிரவேச வைடதர பி. ஏ பரீக்ஷைகளுக்கும் தமிழையும் ஒரு பாடமாகச் சேர்த்திருக்கின்றனர். இவ்வருடம் கொழும்பில் ஆரம்பமாகிய சர்வகலாசாலைக்கல்லூரியிலும் இவ்வகுப்புகளுக்குக்கற்பித்தற்குத் தமிழாசிரியர்களையும் நியமித்திருக்கின்றனர். இந்நன்மைஎனக்காக இலங்கை அரசாட்சியாருக்குத் தமிழபிமானிகள்என் றும்கடப்பாடுடையரேயாம்.

மேற்கூறிய கொழும்புச் சர்வகலாசாலைக்கல்லூரிக்குத் தமிழ்ப்பேராசிரியராக ஸ்ரீ. வ. சுப்பையபிள்ளையவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவர் கோப்பாய் வேளாளப்பிரபுவாகிய சபாபதிப்பிள்ளையவர்களின் புத்திரர்; தமிழ்புலவர் சிரோமணியாகிய சேஞதி ராயமுதலியாரவர்களின் வழிவழிதோன்றல், வலிகாமகிழக்குமணியாகாஞ் இருந்த கதிரேசமணியமவர்களின் பேர். ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலப்பெருமான் யாழ்ப்பாணத்திலே தாபித்து வைத்திருக்கிற வைப்பிராசாத வித்தியாசாலைக்குப் பிரதம ஆசிரியரும் இலங்கை அரினரிடத்தில் வித்தியாவிஷயத்திலே பரிசு பெற்றவரும் புலவர்சொமணியுமாகிய ஸ்ரீ அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்களிடத்திலும், ஸ்ரீலஸ்ரீ. நாவலவர்களினதும் வித்துவசிரோன்மணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளையினதும் மாணுக்கராகிய பிரஸ்ரீ. பொன்னுத்துரைஐயர் அவர்களிடத்திலும், நல்லூரிலே இருந்த மனப்புலிமுதலியாரவர்கள் புத்திரராகிய, புலவரேறு சரவணமுத்தப்புலவரின் பேரரும் இலங்கைக் வர்ணமெண்டிங் கிரேட்ட முதலியாராக இருந்தவரும் தமிழ் இங்கிலீஸ்என்னும் பாஷைகளைச் சர்தேசவிபரீதமறக் கற்றவரும்,ஆகிய ஸ்ரீ சி. வைலாசபிள்ளையவர்களிடத்திலும் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும் சிந்தாமணி தணிகைப்புராணம் இராமாயணம் இருகுவள்ளம் முதலிய இலக்கியங்களையும் நன்கு கற்றவர், ஸ்ரீ சர் வேலவர சாஸ்திரிகளிடத்திலும் ஒரு பெருந்த குருவிடத்திலும் சங்கீதமுங் கற்றவர். 1900ம் ஆண்டு தொடக்கம் அரினர் ஆசிரிய கல்லூரியில் உபாத்தியாயர்களுக்குத் தமிழ்ப் பேராசிரியராகவும் வித்தியாகர்த்தர் சர்தோரில் தமிழ் முதலியாராகவும் வேலைபார்த்து வருகின்றார். உடற்பயிற்சிகளுக்கு வித்தியாசாலைகளிலெல்லாம் பரவிய யுத்த விஷயங் கடிதங்கள் (War leaflets) இயலால் மொழிபெயர்க்கப்பட்டனவே, இயற்றைக்குறிப்பு, வித்தியார்த்தர் டென்ஹாம் துரையவர்கள் தமது வித்தியாபகுதி அறிக்கைப்பத்திரத்தில் நன்கு வியந்திருக்கின்றனர். சிலமாசங்களுக்குமுன் இவர்கள் செய்து வெளியிட்ட 'ஜோர்ஜுமன்னர் இயன்மொழி வாழ்த்து' என்னுஞ் சிறு புத்தகத்தைப் புகழ்ந்து பாராட்டாதவரில்லை. மாதிரிக்காக, சென்னபட்டினம் ஆங்கில தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ செல்வக் கேசவராய முதலியார் எம். ஏ. அவர்கள் கூறியதை நோக்குகோமாக, "உங்கள் ஜோர்ஜ் மன்னர் இயன்மொழி வாழ்த்தை ஒருகால் ஓதிய அளவில் பரவப்புலத்தானை அழுக்காறு என்னை அணுகி நன்புபாராட்டி வருகின்றது. சங்க நூல்கள் எங்கட்கெல்லாம் புதுப்பாடமாகவே இருக்க அவை உங்கட்குப் பழம்பாடமாய் ஏவல் செய்வது வியப்பினும் வியப்பே. புதரனூறு பத்துப்பாட்டு புதநிரட்டு முதலான இக்காலத்து வேறில்லாமையால் உலகன்வாழ்த்து எச்வரிசையிலும் சோறது தனித்தியங்குவதேயாகும். உம்மைச் சேர்ன் என்பேனு, கபிலன் என்பேனு, மருதனு என்பேனு, சாத்தனு என்பேனு, இளங்கோவடிகள் என்பேனுவை சென்றுகூற அறிவிலேனும் இடர்ப்படுகின்றேன்.''

தமிழிலக்கண விலக்கியகாரர்யும் சம்ஸ்கிருத வறிவும் ஆங்கில வுணர்ச்சியு கொருங்குடைய ஸ்ரீ. கந்தையாபிள்ளையவர்களைப்போல இச்சர்வகலாசாலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராதற்கு இன்னுமொருவர் வாய்ப்பதரிது. ஸ்ரீ கந்தையபிள்ளையவர்கள் சர்வகலாசாலைப் பேராதனாசிரியராய் நிலைபெற்றுத் தமிழ் நூல்களை மேலுக்கு மேலுக்கு ஆராய்ந்தும் ஆராய்வர்களை ஊக்கப்படுத்தியும் காலத்திற்கேற்ப வேண்டிய நூல்களை வெளிப்படுத்தியும் நம் தமிழ்ப் பாஷை மேன்மேலும் விருத்தியாக உழைப்பாரென்பதே எமது நம்பிக்கை.

இங்ஙனம்,
மெ. இ. மாரிமுத்து உபாத்தியாயர்.
வண்ணார்பண்ணை,
துர்மதிஆடு சித்திரமீ.

"வண்ணை வைத்தீசுரசுவாமி கோயில் தேர்ப்போர்வைத் தரும விஞ்ஞாபனம்.

மாதர்காள்!

மானிடயாக்கை யெடுத்த ஒவ்வொருவரும் அத்தியாவசியஞ் செய்யவேண்டியன புண்ணியங்களேயாம். அவை "பசுபுண்ணியம்,'' "பதிபுண்ணியம்,'' என இருவகைப்படும். அவற்றுள் பசுபுண்ணியம், இந்திரபதவி, குபேரபதவியினை யீந்து மிகுந்த பிறவிக்தேவுயிருக்கும். இப் பசுபுண்ணியத்தையே 'பொன்விலங்கென,' பெயோர் இழித்துக் கூறிப்போந்தனர். பதிபுண்ணியமோ பிறவாமுத்தியைக் கொடுக்கவல்லது. ஆனதால் நாம் பதிபுண்ணியத்தையே அனவரதமுஞ்செய்தல்வேண்டும்.

யாழ்ப்பாணத்தமையின் தலைநகரிலே நிலைபெற்ற நிலம்போல விளங்கும் வண்ணைவைத்தீசுரசுவாமி கோயிலில் உற்சவகாலங்களில் இழுக்கப்படுவனவாகிய பஞ்சரதங்களும் இக்காலத்தாறும் வண்ணுன் மாத்தறைக்கொண்டே அலங்கரிக்கப்படுவருகின்றன. கட்டாடிமார் இதற்காகச் சுத்தமான வேறுபுடைவைகள் வைத்திருக்கிறார்களா? ஐயையோ! வெள்ளை வெம்பு வஸ்திரங்கள் கட்டவேண்டிய பகுதிகட்கு, பொன்னன் மாதவிலக்காயிருந்து வெளுக்கக்கொடுத்த, வெண்சேலை, வெம்புச்சேலைகளையே கொண்டுவந்து கட்டுகிறார்கள். வடதேசத்தில் இச்மனமாய அநாசாரச் செயல்கள் சிறகோயில்களில்தானும் நிகழுமாட்டா; தலைவர்கட்குப் பலவன்னச்சலாத்தினுலியற்றப்பட்ட போர்வையினுலே தேரை அலங்கரித்து ரதோற்சவம் நடத்துவார்கள்.

அங்ஙனமே மயிலாதீவு நாகபூஷணிஅம்மன் கோயிலுக்கு, சென்ற வருடத்தில் ஸ்ரீமத். அரு. ஸ்ரீமத் வெங்கடாசலஞ்செட்டியார் மிகுதியாகத் தனது சொந்தப்பொருள்கொண்டு, சிறதொகை பிறரிடத்தில் வாங்கியும், 1500 ரூபாய்வரையில் செலவுசெய்து இந்தியாவிலிருந்து சலாத்துப் போர்வையும் அழைப்பித்துச்கொடுத்து அர்த்ரதத்திற்குப் பூட்ட இரண்டு மாக்குதிரைகளுஞ் செய்வித்துக் கொடுத்திருக்கிறார். அங்ஙனமே மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் தர்மகர்த்தாக்களும், இந்தியாவிலிருந்து போர்வை எடுப்பித்துத் தேரை அலங்கரித்து நடத்திவருகிறார்கள்.

இக் கெடிஸ்தலமாகிய வண்ணைவைத்தீசுரசுவாமிகோயில் தேர்கள் இத்துணைக்காலமும், வண்ணுன் மாத்றால் அலங்கரித்து இழுக்கப்படுவதை, தாம் தரிதினிட்டிய பொருளைத் தேவிபோல அந்தியர் அநுபவிக்கச்சேமித்து வைத்திருக்கும் பிடிப்புக்களில் ஒருவராவது சிந்திக்காமலிருப்பதை, சேர சோழ பாண்டியரென்னும் மூவேந்தராலும் நிறைநிலைப்படுதலுமெழுந்துக்கிடந்த எத்தனையோ பாடல் பெற்ற கெடிஸ்தலங்களைச் சிரேஞ்தாரணம் பண்ணிச் சம்ப்ரோக்ஷணமுஞ் செய்வித்து, மாநிரமெங்கணும் பெரும் புகழ் நிறவிய, 96 நகரத்தாருடைய கடைகளுக்குக் கூட்டளிகளாக வர்திருக்கும் யாழ்ப்பாண நகரத்தார் கண்ணுற்று, நிறுதும் மனஞ்சலியாது, அப் பஞ்சரதங்கட்கும் இந்தியாவிலிருந்து மேற்போர்வை அழைப்பித்துக் கொடுக்கவும், அவைகளில் பூட்ட பத்து மாக்குதிரைகளியற்றவும்,'சுமார், அதற்குப் பதினாயிரரூபாய்க்கு மேல் செலவு வருமென மதிப்பிடு, அச் வெபுண்ணியத்தின் பெறுபேறு, யாழ்ப்பாணவாசிகளுக்குஞ் சேரவேண்டுமென்னுஞ் வொருகண்ணியத்தினுல் நன்கனிடத்தில் பற்று வாவு செய்வோருக்கு விளைக்கப்படுத்தினுர்கள் அவர்களில் கிரியிலேற்படி நீபபோலத் தன்னையின் பேரை விளக்கிய மகேஸ்வரிய ஸ்ரீமான். மார்க்கண்டேய பிள்ளை அவர்கள், 500 ரூபாய் கொடுத்திருக்கின்றார். இன்னும் பலரிடத்திலும் வாங்கிச் சுமார், 1500 ரூபாவரை சேர்த்திருக்கிறார்கள். வருகிற பங்குனி உற்சவத்திற்கு வண்ணுன் மாத்றின்றி, சலாத்துப் போர்வைதரித்தே பஞ்சரதங்களும் இழுக்கவேண்டுமென்று நிச்சயித்திருக்கின்றார்கள். ஆதலால் யாழ்ப்பாணப் பிரபுக்களே! இவ்வரிய கொப்பில்லாத சிவபுண்ணியத்தை அவர்களே தனியாக் குறையடிக்கொண்டு போகவிடாதீர்கள். ஆறு நெல்லிப் பெருக்கொண்டிருக்கமாட்டாது. சிறிது காலத்தில் ஒரு இலையுயிர்ந்து வடிந்தொலிவிடும். வளர்த்து போகாதீர்கள். கோயில்மதிலில் வைத்துக் கட்டப்பட்டகல்லைத் "இருப்பணி'' என்றும், தேவுகிடந்தனைக் குட்டைக்கல்லென்றும் உலகோர் கூறுவார்கள். உங்கள் தேட்டமாகிய குட்டைக்கல்லை, எப்பட்டவாவது இருப்பணியிலேற்றி விடுங்கள். வீடு பற்றியெரியும்போது வெளியில் எடுத்தெறிந்த பொருள்தான் மிச்சப்படும். இன்னும் 10 வருடங்கள் சென்றபின்தான், வருவேனென்று கூறுதலை உங்களுக்கு நிருபம் விடுத்திருக்கின்றனுளோ? முற்றிப்பழுக்கக்கூடிய காய்கள் மரத்தின்கண்ணே யிருப்பவ பிஞ்சுகளுநிர்வலை நீங்கள் பார்க்கவில்லையா? உங்களுக்கு இன்றான்காறுஞ் சென்ற வயசு இவ்வளவென்று வரையறுத்து எண்ணுவீர்கள். இன்னும் மிச்சமாயுள்ள வயசு இவ்வளவென்று எனக்கெடுக்க முடியுமா? நாளைக்கு யாருடைய முறையென்று நிச்சயமாய்ச் சொல்லுவீர்களா? சேற்றுநாமோடு சப்பாவித்துக் கொண்டாடிய கிடேன் இன்றுமானுகு செல்வதை கேர்க்கவீர் காணவில்லையே? நம்மிடத்தில் யமன் வருதற்குக் கைகாட்டிவிழுந்துவிட்டது! காலனும் எருமைக்டாவின் அசைவடிவிற் கால் வைத்துவிட்டான். தனனைக் கண்டு நாய் கடிக்கத்தாக்கிறதுபோது வலியலே தடியற்றவனைப்போல விழிக்கப்போகிறீர்கள். பின்னுற் பார்ப்போமென்று தவணைபோடாதிர்கள். சமுத்திரத்திலே தலையடங்கிய பின் காத்திருந்து என்னுஞ் செய்யமுடியும்? மனைவியும் கேடிய பொருளும் வீட்டனவிலும், பிள்ளைகள் மயானமாவிலுமட, சுற்றத்தார் குளத்துநீரவும் வருவார்கள். அப்பால் நாம் செயியகாலத்தில் செய்துகொண்ட புண்ணியபாவங்களே சீராத்நின் நிழலைப்போலத் தொடர்ந்துவரப்பாலன. ஆதலால் அன்பர்களே! அதிவிரைவிட்டமுடைத்தாகிய இச் சிவபுண்ணியத்தைச் செய்துகொள்ளுதும் ஆலயமின்றி ஒவ்வொருவரும் முந்துங்கள். உலோபமின்றி அவரவர் தருதிக்கேற்ப இயன்ற தொகை கொடுக்கலாம். அத்தொகையை அரு. அரு. சோம கனபதிகுருக்கள், ராம. அரு அருராா. கனபதிகுருக்கள் கொண்டுபோய்க்கொள்வர். இச் சிவபுண்ணியம் பூர்த்தியானபின், அதன் ஆவணத்தில் ஒவ்வொருவரும்கொடுத்த தொகைகளையும் விளம்பரஞ்செய்வார்கள்.

இங்ஙனம்,
க. வைத்தியலிங்கபிள்ளை,
வண்ணைநகர்.

தமிழ் மொழி.

உலகத்து வழக்கும் மொழிக செல்லாவற்றினுஞ் சிறந்த பண்டைக்காலந்தொட்டே அண்டகும முனிவருள் சொன்டாடப்பெற்று வழங்கவுந் சந்தண்டமிழ் மொழி யொன்றேயாம். அதற்கு முதநூல் வாஞேரேத்தும்வாய்மொழி ஆனுப் பெருமை அருந்தவமுனிவரென்னும் ஆசிரியர் அகத்தியனுரியற்றிய அகத்தியமாகும். அந்நூலதன்வழித் தோன்றிய பிறபன்னூலும் இறப்பு வீழாருயிரென வீளக்கி வாழ்வது, அகத்தியத்தின் வழித்தோன்றிய நூல்கள் பலவற்றினுஞ் சிறந்த ஒல்காப்பெருமைத் தொல்காப்பியமொன்றேயாம். இதற்குச் காலத்துக்குக் காலம் ஒருவரை ஒருகர் மறத்துரையெழுதிய வித்தகர் ஐவராவர், அவர்கள், இளம்பூரணர், நச்சினுக்கினியார், சேனுவரையர், பேராசிரியர், கல்லாடர் முதலியோரென்க. இவருரைகளைத் தழுவிப் பின் சன்நூல் முதலிய பன்நூல்க ளியற்றப் பெற்றன. இவையே தமிழ்மொழியின் முதல் வழி புடைநூல்களாகும்.

இந்தமை மாத்துமுமுடைய தமிழ்ப் பாஷைக்குரிவர் தெய்வோர்ப்பத்தி கூறுவர். தேவ இருடியாகிய அகத்திய முனிவர் சிவபெருமானிடத்திருந்தும், செந்தமிழ்ப் பாமரிரியனுகிய சுப்பிரமணியக்கடவுளிடத்திருந்தும், தமிழைப் போக்கறக் கற்ற அம்மொழிக்கோர் சிறந்த இலக்கண நூலியற்றினுரென வழங்கப்படுகிறது. அகஸ்திய முனிவர் தமிழ் கற்பதற்கு முன்னரும் அம் மொழி உள்ளதாலின் அம்முனிவரே தமிழை உண்டாக்கினுர் எனக் கூறுதல் அமையாது. 'என்றுமுள தமிழ்பாடி இவரொன்றான்' என்றாராலின், தமிழர் உள்ளுன்றே அம் மொழியும் உள்ளதென்பதே பொருந்த முடையதாகும். தமிழ் மொழியே எல்லா மொழிகளுக்கும் முற்பட்டதென்றும், அதிலிருந்தே பிறபாஷைகளெல்லாம் கிரிபுடைமொழிகளாகப் பிறந்தனென்பதும் சில பெரியோர் சொன்னை. "செந்திறத்த தமிழோசை வடசொல்லாகித் திசைஞெயிறு'' என்றார் நிருமுகை மன்னனும்.

தமிழ் வழக்கு நிலத்தின் எல்லை வடக்கின் கண்ணே வேங்கடமும், தெற்கின்கண்ணே கன்னியாகுமரியும், கிழக்கின்கண்ணுங் மேற்கின் கண்ணுங் கடலுமாம். "வேங்கடங் குமரிமீ புனற்பௌவம் என்றிச்சான் எல்லை தமிழது வழக்கே'' என்றாராலனும், "வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத்தமிழ்கூறு நல்லுலகத்து'' எனப் பனம்பாரனுர் எல்லை கூறினுராலனுஞ் காண்க. இவ்வெல்லை கூறியாவர்தங் குமரிக்குத் தென்புறத்தும், நிலனிரு கிறந்தல் வேண்டும். அல்லது கிழக்கும் மேற்குங் கடலெல்லை கூறியவர் தெற்கிற்கும் கடலை எல்லையாகக் கூறியிருப்பர். ஆதலின் குமரிக்குத் தெற்கில் தமிழல்லாத பிறமொழி வழங்கிய நாடுகளிருக்க, அவை தடியார்குலகூறும், எழுதெங்காடு, எழுமுனாடு, எழுபின்பாலநாடு, எழுகுன்றநாடு, எழுகானாடுகாடு, எழுகுடாப்பனாடு என்னும் நாற்பத்தொன்பதுநாடுகளுக் குமரிகொல்லைக் முதலிய மலைநாடுகளேபோலும் "வடிவேலெறிந்த வான்பகை பொருதுபஃறுளியாற்றுடன் பன்மலை நடுக்கற்துக்-குமரிக் கோடுங் கொடுங் கடல் கொள்ள'' எனச் சிலப்பதிகாரத்திற் கூறியிருத்தலின், ஓர்கால் பஃறுளியாற்றுடன் பலப்பக்கமுள்ள உலகநாடிய குமரிக்கோட்டையுங் கடல்கொண்டதென்பது விளங்குகின்றது தென்பாலிமுகத்தையுங் அவ்வடக்கு எல்லையாகிய பஃறுளியாற்றையும், குமரியென்னு மாற்றையுங் கடல் கொள்ளுதன் முன்னரே காய்கினைமழுகி யென்னுப் பாண்டிய மன்னன் தென்றலையி னைந்தே நிலைச்சங்கம் இரியினன். நிலைச்சங்க மிருப்போர் இறையானுஞ், அகத்தியனுஞ், முருகவேளுஞ், முருஞ்சூர் முதாராராயனும், நிதியின் நிலவுமுக் என்றித்தொடக்கத்து காலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர். அவர் செய்த நூல்கள், முதுநாரையும், முதுகுருவும், கனியாவிரையும் ஆகிய பலவாம். "கவிதரக்கேறிஞர் எழுவருள் ஒருவன் சயமகிரித்தியாகிய 'நிலந்தருதிருவிற் பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்தி இரிவினுன்'' என அடியார்க்கு நல்லார் கூறுவர். தென்மதுரை அகத்தே நிலைச்சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்தியிருப்பின் அதற்குப் பாலிராஞ்செய்த, தொல்காப்பியங் பின்றை ஒருசால மானவாகிய பனம்பாரனுர் குமரிக்குத் தெற்கின்கண்ணே இருந்துகொண்டு "வடவெங்கடந் தென்குமரி'' என எல்லை கூறியிரார். தென்மதுரை குமரிக்கு வடக்கே யிருந்தாராயின் இண்டாலது கடல் கோளுக்கிடமில்லை. ஆதலின் தொல்காப்பியம் இடைச்சங்கத்திற் புலப்படுத்திய நூலாதல் வேண்டும். நிலைச்சங்கமிருந்தாலும் இற்றைக் கேறக்குறைப் பன்னீராயிரவருடங்கள் வரையிலென சிறிதுகுறைத்த இறையனுரைப் பொருளைக் கொண்டு துணிவாம். முலிலைச் சங்கங்களி லியற்றிய நூல்களில் கடல் கோளிற்படா தெஞ்சிய நிலவும், கலைச் சங்கத்து நூல்கள் பலவும், மகமதியர் இந்தியாவுட் புகுந்தபோது அவர்களா லேவப்

பட்ட நிக்கடவுளுக் கிரையாயிற்று. இக்காலத்தே தமிழரிடமிருந்த அரிய நூல்கள் பல விரந்தன. பெருநாரை, பெருங்குருகு, தேவவிருடி நாரதன் செய்த பஞ்சபாரதீயம் முதலியவும் பிறவுமாகிய விலைமதிப்பற்கரிய பூதனங்களாகிய ஆபரணங்களை யிழந்து தமிழ் நங்கை மிக விசனமுற்றனள்.

அகத்தியர் பன்னிரு மாணவருட் சிறந்தாரும், சமதக்கினி முனிவருக்கு மகனாரும், திரணதூமாக்கினி என்னும் இயற்பெய ருடையாரும், அருந்தவத்தொன்மைப் பெருந்தகையாருமாகிய தொல்காப்பிய முனிவர், தொல்காப்பியம் புலப்படுத்தியது இடைச்சங்கத்தின் முற்பகுதியிலாகும். இடைச்சங்கம் இற்றைக்கு எண்ணாயிரம் வருடங்களுக்கு முன்னுள்ளதாதலாலும், தொல்காப்பியம் அச்சங்கத்திற் புலப்பட்டமையாலும் அதன் காலம் எண்ணாயிரம் வருடங்களாமெனலின் கதிற்க சந்தேகமில்லை. "முன்னிர்வழக்கம் மடுவேலாடிக்கிலே" என தன்னூலகத்துக் கூறிய யிருந்தலின் நாகநாட்களிலிருந்த தொல்லோரும் பொருளீட்டும்பொருட்டு மரக்கலமேறித் தொலைகான இடங்களுக்குப் பிரயாணஞ்செய்து சென்றார்களென்பது நன்கறியலாம். யவனர் முதலிய பரதேசிகளும், வேறும் பற்பல பிறபாஷை பேசும் நாகரிக சாதியாரும் வியாபாரத்தின்பொருட்டும், உத்தியோகத்தின் பொருட்டும் தமிழகத்தே வந்து தம்மாக்களுடன் செறிந்து கலந்து வாழ்ந்தமையானர் பிறதேசங்களிலுள்ள பொருட்கள் தமிழகத்தே கொண்டுவரப்பெறின் அப்பொருள்களுக்கு இட்டவழங்கும் பெயராகிய பிறபாஷைச் சொற்கள் தமிழில் கலந்தேறுதலும், பிறதேசங்களுக்குச் சென்ற தமிழர் பண்டங்களின் பெயராகிய தமிழ்ச் சொற்கள் அவர் பாஷையில் கலந்தேறுதலும் இயல்பே. இங்ஙனஞ் சிறிது சிறிதாகப் பிறபுலச்சொற்கள் பல தமிழில் வந்தேறி வழங்கலாயிற்று. தமிழிலே மிகுதியாகச் சமஸ்கிருத பதங்கள் வந்து வழங்குதல்பற்றி தமிழ் வடமொழியி னின்றும் பிறந்ததெனச் சிலர் கூறுவர். அது பொருந்தாது. தமிழ் பிறபாஷையி னுதவியில்லாது தானே தனித்தியங்கவல்ல பாஷையாம். "தமிழ் மொழியின் புணர்ச்சிக்கட்படுஞ் செய்கைகளும் குறியீடுகளும், வினைத்தொகை முதலிய சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம் புறம் முதலிய பொருட்பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், இன்னோரன்ன பிறவும் வடமொழிக்கண் பெறப்படாதனவாம்" எனச் சிவஞானயோகிகள் கூறுவதே தமிழ் மொழி வடமொழியி னின்று பிறந்ததன்றென்பதை யுணர்த்தும். தமிழில் வடமொழிச் சொற்கள் மிகுதியாய் வழங்குவதற்குக் காரணம் யாதெனில், தமிழர் ஆரியர் என்னு மிருபிரிவினரும் நீர்காலத்துக் கலந்து செறிந்து உடனுறைந்து வாழ்ந்தமையானும், தமிழ்வேந்தர் வடவாரிய மன்னரை வென்று குமரிமுதல் இமயமீறாக இராசியஞ்செய்தமையானும், இன்னும் பலகாரணங்களினாலுமென்க. அஃதேல் வடமொழிச் சொற்கள் தமிழிற் காணப்படுதல்போல தமிழ்ச்சொற்க ளவ்வளவு வடமொழியிற் காண்கிலமேயெனில், ஆரியபாஷை அனேக வருஷங்களுக்கு முன் பேச்சுவழக்கற்று எட்டுவழக்கில் மாத்திரமிருந்தமையாலும், தமிழ்ப்பேச்சு வழக்குடன் எழுத்து வழக்கிலும் செய்யுளிலும் வழங்கிவருதலாலும் முன்னதிற் தமிழ்ச்சொற்கள் சென்றேறவேண்டாதாயிற்று. என்றும் பேசாமலேயிருக்குமொருவன் பிறமொழிச்சொற்களை யெடுத்து வழங்குவதற்கெங்ஙனம்? வடமொழி மண்ணுலகம் முதல் விண்ணுலகங்களிலும் வழங்கிவரும் தேவபாஷையென்றும், அதுவே மந்திரமொழி யென்றும் பிறபாஷைகளுக்கு ஆதாரமெனவும் சிலர் மொழிவர். அது அறியாதார் கூற்றாகும். இறைவனார், முருகவேள் முதலிய தெய்வங்களே இத்தீந்தமிழின் சுவையின் எழுந்த வேட்கையால் சங்கமிருந்து நூலாராய்ந்தனரென்றால் பிறமொழிகளிதற்கிணையாமோ. இம்மட்டோ, சோமசுந்தரக் கடவுள் சுந்தரபாண்டியனாக அரசாண்டதும், உமையம்மையார் தடாதகைப்பிராட்டியாராகத் திருவவதாரஞ்செய்ததும் இச்சொழிதமிழிற் கனிந்த கனியின் சுவைநாத்தைச் செவிமடுக்கவன்றோ? வேதேர்தப் பாஷையிற்கொண்ட இச்சையினலன்றோ முழுமுதல் சங்கமிருந்து நூலாராய்ந்ததும், சவுந்தரபாண்டியனுமாயுதித்ததுமுண்டோ? தேவரோடே இத்தமிழின் தீஞ்சுவையில் மயங்கினரென்றால் மற்றைத் தேவர்கள் நீலவினியதமிழைப் பேசாதிருக்க முடியுமோ! நீரைவல்லோனுமிய தேவஇருடி நாரதன் பஞ்சபாரதீயமென்னும் தமிழ்நூல் இயற்றவில்லையா. காசிபர் வசிட்டர் முதலிய இருடிகளும் குமரக்கடவுளிடமிருந்து இலக்கணங் கற்றாரென அருந்தவச் செல்வப்பெருந்தகையாராகிய அருணகிரியார் கூறியிருக்கின்றார். வடமொழியில் இந்திரனாற் செய்யப்பட்ட ஐந்திரவியாகரணமென்றும் இலக்கணத்தையொத்த நூல்களுண்டு. நூலகத் தமிழிலும் சுடர்நாண் குறிக்கவல்ல முனிவர்களால் தமிழ்ச்சங்கத்திற் செய்யப்படவில்லையா? ஆதலினால் வடமொழியினும்பார்க்கத் தமிழ்மொழி ஒருவாற்றானுங் குறைந்ததல்ல வென்பது நன்கு புலப்படும்.

இக்கலைகளெல்லாந் தமிழிலிருந்தாலும் வேதாகமங்களெல்லாம் வடமொழியிலேயே புன்னது, ஆகையால் அம்மொழிதான் தேவபாஷை என்பர் சிலர். வடமொழியில் உள்ள வேதாகமங்களைப்போலவே தமிழிலும் தேவாரதிருவாசகமாகிய தமிழ்வேதங்கள் உண்டு. அவைமிகவும்பிற்காலத்தனவே, சமயகுரவருக்கு முன்னர் தமிழருக்கு வேதமொன்றுமின்றி வடமொழியிற்றானேயெனின், "அருமறையைச் சிச்சிலிபண்டருத்தத்தேடும் அதுபோல் இதுவென்று முனவரம்" என்றார் உமாபதிசிவம். பண்டொருகாலத்திருந்திருந்தபோன தமிழ்மறையைச் சிறுகுசுடர் சமயகுரவர்களாயிலாக விளக்கிவருவித்தெயன்றி வேறு புதிதாகத் தோற்றுவிக்கவேவர். வடமொழி வேதங்களும் தமிழ்வேதங்களும் ஒருபோதும் சமத்தகமுடையனவாகா. என்னை? வடமொழிவேத யோகிகள் வைதும் பயன் செய்யா மென்றும், தமிழ்வேதயோகி நூற்பயன் விடேன்றர்; வடமொழிவேதயோகின் அன்புபெருகி உள்ளங்கசியாதென்றர், தமிழ்வேதயோகின் சுருங்கன்மனமும் கரைந்துருகுமென்றர், முன்னது மட்கல மொக்குமென்றும், பின்னது பொற்குடமொக்குமென்றும், சிவப்பிரகாசசுவாமிகள் கூறவதே தமிழ்வேதங்கள் வடமொழிவேதங்களினும் சிறந்தனென்பதை யுணர்த்தும். தமிழ்ப்பாஷை எவ்வளவு மேன்மையுடையதாயிருந்தாலும் அது மந்திரமொழியாகாதே. மந்திரமொழியென்றாலும் வடமொழியிற்றானே யுள்ளனவென வொருசாரார் செருக்கித்தருக்குவர். தமிழ்மொழியில் வடமொழியிலுள்ள மந்திரங்களிலும் அனேகமுக்கியப்பமோடி மாமந்திரங்களே பதினொரு திருமுறைகளாக வகுக்கப்பட்டதென்பது அனுபூதிமான்கள் பலருடைய கொள்கை. அன்றியும் தமிழ்ப்பிரபந்தங்களே முதலையுண்ட பாலகனை வரவழைத்ததும், சாம்பலைப்பெண்ணுருவிற்றதும், கடலினைத் தடுநிறுத்ததுமாகிய அரியபெரிய செயல்களைச் செய்தது. ஆரியமன்று தமிழ் நிறைமொழிகூறிய ஒருவனை நக்கீரனார் சாசப்பாடிய மந்திரமும் தமிழே. மந்திரமென்பதியாதென அறியாதார் வடமொழியல்லாத பிறமொழியின் மந்திரமாகாதென்பர் கழறுவர். முருகன கடிந்த குறுமுனிபால் உபதேசம்பெற்று உலகியற்பொருளெல்லாம் தெரிவிது ணர்ந்த தொல்காப்பியதேவர் "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த - மறைமொழி தானே மந்திர மென்ப" எனக் கூறினரேயன்றி சமஸ்கிருத மொழிதான் மந்திரமாகும் என எங்குஞ் சொல்லவில்லை. மந்திரங்கள் பிறமொழிகளிலுமிருப்பது சகசம். ஆகலின் தமிழ்மொழியானது பலவாற்றானும் ஆரியம் முதலிய மொழிகளெல்லாவற்றினுஞ் சிறந்து தலைபெருஞ்சிறப்பாய்த்திகழ்கின்றதென்பது கைன்னிடை மலைபோல் வெளியாகும்.

இவ்வகிய பாஷையைப் பேசிவந்தவர்களாகிய தொல்லோர் மிகவும் நாகரீகநிலையடைந்திருந்தார்கள். பலவகையான தொழில்களையும் கடந்திவந்தனர். தம்தேசத்துக்காக உயிரைத் துரும்பெனமதித்த அநேகம்போர்வீரர்களிருந்தார்கள். ஆடவரல்லாதபெண்களும் கல்விகற்றுத் தேர்ச்சியடைந்திருந்தனர். அவரிருந்த உச்சநிலையையும் அவர் சந்ததியார் தற்போது இருக்கும் நிலையையும் நோக்கின் பேராச்சரியம் விளைக்கும். தமிழ்வேந்தர் போர்வேட்டுச் சென்று வடவாரிய மன்னர் முடிகளைக்கஞ்செய்து குமரியோடு வடவிமயத் தொருமொழிவைத் தாண்டனர். பிறதேசங்களிலிருந்து கடல்மார்க்கமாகப் புரவிகளும், வடமலையிற் பிறந்த மணியும் பொன்னும், தென்கடலில் விளையும் முத்துக்களும், இன்னும் வேறுவேறிடங்களிலுள்ள அரியனவும் பெரியனவும் வந்து விலையாயின. கப்பல்களை அழைப்பதற்காகத் துறைமுகங்களில் கலங்கரைவிளக்கம் (Light Houses) காணப்பட்டன. தற்காலத்திலுள்ள தத்துவசாஸ்திரிகளுக்கும் எட்டற்கரிய அரும்பெரு விஷயங்களை அறிந்திருந்தனர். ஆகாயத்திலே ஆகாய இரதங்களில் உலாவிவந்தனர். "இடைச்சங்கத்து அனுகுலன் என்னும் செய்யப் பாண்டியன் தேரோடு விசும்பு செல்வோன்" எனக் கூறப்பட்டிருத்தலும், திராவிடவேந்தனுமிய இராவணன் சீதாபிராட்டியை ஆகாய விமானத்தி லேற்றிச் சென்றுனெனச் சொல்லப்படுவதுமே இதற்குச் சான்றாகும். சுருக்கச் சொல்லில் அவர்கள் எல்லாவகையிலும் உச்சநிலை யடைந்திருந்தார்கள்.

மலையினுச்சியின்றுந் தவறி விழுந்தவர்களைப்போல முன்னிலையை நோக்க இப்போது தமிழர் மிகவும் தாழ்நிலையடைந்துவிட்டார்கள். வளர்பிறையைப்போலப் பிறநாடுகளெல்லாம் நாளாவண்ணம் வளர்ந்துவரத் தமிழ் நாட்டிமாத்திரம் தேய்பிறையை நிகர்த்துத் தேய்ந்து தேய்ந்து வருகின்றார்கள். இன்னும் விழியாது உறக்கத்தில் இருப்போமாகில் ஒருபோதும் உயர்வடைய முடியாது: எமது பாஷையைக் கற்று முன்னிருந்த சங்கவித்துவான்களைப்போல வரலாம். மற்றும் வியாபாரம் கைத்தொழில் முதலியவற்றினும் மேன்மையடையலாம். பல்லாயிர வருடங்களாக வழங்கிவரும் அமிழ்தினுமினிய செந்தமிழ்மொழியை நஞ்சிருர் முதல் வயதில் முதிர்ந்தோர்களும் கல்லாது பிறமொழிகளைக் கற்பதிலேயே ஊக்கமெடுக்கின்றனர்: பின்னைவரக் கேட்கப்போய்ப் புருஷனை யிழந்த கதைபோலத் தம் வயிற்றுப் பிழைப்புக்கென்று படிக்கும் பாஷை அவ்வரையே கெடுத்துவிடுதலை அவர் உணரவதில்லை. தாய்முலைப்பால் கிரம்ப உண்டு வளர்ந்த பிள்ளை ஆண்டில்முதிர முதிரப் பெலமுள்ளவனாய் வளர்ந்து அரிய பெரிய வேலைகளைச் செய்து முடிப்பதற்கு உதவுவதுபோல, தம்பாஷையை நன்குகற்றறிந்த பின்னர் பிறபாஷைகளைக் கற்கப் புருஷன் அம்மொழிகளின் நட்பங்களை யெல்லாம் இலேசிலுணர்ந்து தேர்ச்சியடைவான். தான் சிற்பதற்கே பெலனற்ற நாணின்மீது பெருஞ் சுமையை எற்றின் அது தகர்ந்து உடைந்துபோவதுபோல தாய்பாஷையைக் கல்லாது பிறபாஷையிற் பயில்வோரும் இளமையிலேயே இறந்துபோகின்றார்கள். இது எல்லாரும் அனுபவத்திற்காணும் விஷயமே. உன்னைமிருந்த பூமியில் வளர்கிறதாகிய தென்னம்பிள்ளையை குளிர்சனிமிருந்த இங்கிலாந்து முதலிய தேசந்தேசத்தில் நட்டுத்தண்ணீர் வார்த்துவருவோமாயின் அது பட்டுப் பயனற்றுப் போவது நிண்ணம். ஆதலின் நாம் [illegible]ளைர் பழக்க வழுக்கங்களை மைப்பற்றவேண்டிய அவசியமில்லை. அங்ஙனம் ஆசாரங்களை அனுசரிப்போர் அதினால் எதனையடைவேயன்றிப் பயன்பெறுவேன், நாமெல்லோரும் கீண்டதுயிலுற்று விழித்து எழுந்தவர்களாகவும் மற்றுஞ்சாதியாரிலும் மேம்பட்டவர்களாயுமிருப்பதிலும் தமிழ்க்கல்வியைக் கற்றுக்கொண்டு பின் பிறபாஷைகளைக் கற்றல்வேண்டும்.

நாம் பேசும்போதெல்லாம் பாதிக்குமேல் இங்கிலீஸ் சொற்களைக் கலந்து பேசுகிறோம். அவ்வழக்கத்தை நிறுத்திக் கூடியளவு தனித்தமிழிற் பேசப் பழகவேண்டும். 'கல்வி கற்கும் காடமொழியல்?' ஆகையால் பேசும்பொழுது தமிழ்ச்சொற்கள் கலவாமலும் தமிழ் பேசும்பொழுது ஆங்கிலமொழியைக் கலவாதும் பேசத் தொடங்கவேண்டும். தற்போது ஆங்காங்கு கல்விச்சாலைகள் முதலிய உத்தமர்களால் ஸ்தாபித்து நடத்தப்பெறுவதற்கு இவர்றின் உதவியால் எர்தாமணிபோன்ற செந்தமிழ்மொழி முன்னிலைக் கொருகாலும் வரும் பதிக்கத்தேகமிலை.

26—3—21,
Taiping.

இங்ஙனம்,
ச. சி. சுந்தையா.

இலங்கையில் இருந்து ஒரு விளம்பரம்.

கீழ்ச்சொல்லும் குணங்கள் காணுமற்போனல் மருந்துவிலை திருப்பக் கொடுக்கப்படும்.

அற்புதமான ஒளஷதம்.

ஆயுர்வேத தாதுஸ்தம்ப வட்டிக்காவ

விலை 30-க்கு ரூபா 2 சதம் 50, அல்லது ரூபா 2 அணா 8.

தாதுபுஷ்டியும் இந்திரியக்கட்டும் இல்லாதவர்களுடைய நற்காலம்.

ஆச்சரியம்! மிக ஆச்சரியம்!!

உண்மையான ஒளஷதம்.

ஒருவேளை மருந்தில் குணந் தெரியும். இந்த மருந்தானது சகலவித மேகச்சூடு, வெட்டைச்சூடு, பித்தச்சூடு முதலான உஷ்ணங்களைச் சமனாக்கி தாதுபுஷ்டி, சரீரபுஷ்டி, முகவசீகரம், தேகக்காந்தி, மூளைக்குப் பலங்கொடுப்பதுடன் ஆண்மைக்குறைவு, நரம்புத்தளர்ச்சி, அக்கினிமந்தம், மலச்சிக்கல், பசியின்மை, வீரியநஷ்டம் முதலான வியாதிகளைச் சுகமாக்கும். தேவாமிர்தம் இது ஒன்றுதான்.

ஆயுர்வேத பிரமேக நிவாரணி.

இதனால் குணமாகும் வியாதிகள்:—வெள்ளை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, இரத்தம்வடிதல் முதலான மேகவியாதி 21-க்கும் சஞ்சீவி.

இதன் விலை சீசா 1-க்கு ரூபா 2.

எமது மருந்துகள் வியாபாரஞ்செய்ய கமிஷன் ஏஜண்டுகள் தேவை. 100-க்கு 25 வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

ஆயுர்வேத தைலம்.

ஆச்சரியமான மருந்து ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது.

இதை ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள்.

விலை சொற்பம்! குணம் அதிகம்!

இந்தமருந்தை வெளியேதேகத்தில்பூசுவதினல்குணமாகும் வியாதிகள்.

(1) தலைவலி, கபால இடி, பிடரிவலி, தடிமன், ஜலதோஷம், செஞ்சுவலி, மார்படைப்பு, இருமல், சக்கிருமல், ஒருத்தலைவலி, வாந்தி முதலிய வியாதிகளும்,

(2) வாய்வு, வலிகள், சாம்புவலிகள், பிடிப்புகள், சளுக்கு வலிகள், கைகால் குளிர்ச்சி, செண்டை இழுத்தல், வயிற்றுவலி, வாத்திபேதிகாலங்களில் உண்டாகிற சகல வியாதிகளும்,

(3) வெட்டை வாய்வு இடுப்புவலி, முழங்காலவலி, கணுக்காலவலி, கைவலிகள், உளைச்சல்கள், வாதம் 80 வகைகளும்,

(4, பல்வலி, பல்லரணை, கன்ன வீக்கம், கட்டிகள், புறப்பாடுகள், மொழிவீக்கம், ரத்தக்கட்டு, சதை பிரட்டல் முதலியவைகளும்,

(5) தேள் கடி, பூரான் கடி, எலிக்கடி, விஷக்கடிகள், சிறுகுழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் உண்டாகிற இன்னும் அனேக வியாதிகள். இந்த மருந்தை நோயுள்ள பாகங்களில் பூசினதும் சுகமாகும், விலை சீசா 1-க்கு ரூபா 1—0—0.

டாக்டர் எம். சந்திரசேகரம், ஆயுர்வேத வைத்தியசாலை,
நெ. 49, கச்சேரி ரோட், குருநாக்கல். (சிலோன்.)

My Address:—**Dr. M. Santherasakaram,**
Ayurvedic Medical Hall,
No. 49. Esplanade Road, Kurunegala, Post. (Ceylon).

Q. 9.

M, Sultan Abdul Cader,
SULTANIN MEDICAL HALL, PORTONOVO, S. A. Dist.

துரையே! கவனியுங்கள்.

இழந்துபோன பலத்தையும் தளர்ந்துபோன நரம்புகளையும் ஒரேவேளை லேகியம் சாப்பிட்டபிறகு பலத்தைக் கொடுக்கும்.

மெடல் பெற்ற

சிட்டுக் குருவிச் சத்தின் லேகியம்.

இந்தச் சிட்டுக்குருவிச்சத்தின் லேகியத்தைப்போல் மற்ற வைத்தியர்கள் செய்து தந்தால் 2,000 ரூபா இனும் கொடுக்கப்படும்.

☞ கண்பிற்குச்சத அன்பர்காள்! அருமையும், பெருமையும், பேரும் கீர்த்தியும்பெற்ற இந்த அற்புத குணத்தமிய லேகியத்தை உபயோகித்த உத்தமர்கள் மணவாழ்க்கையிலே சுகானந்த இன்பத்தை யடைவர். ஆறு! குணத்தாற் சிறந்ததுதான் என்று பன்முறையும் புகழ்கர் புருஷரென்று இப்பூவுலகில் பிறந்து வளர்ந்துவரும் பால்யபருவத்திலிருந்திப ஆசையென்னும் மின்னுர்மோகத்தில் ஆழ்ந்து தேகசத்தாரமாகிய நாதவிந்தைச் செலவழித்துச் செலவழித்து யௌவனபருவத்தில் வீரியவிர்த்திகுறைந்து போகசக்தியிழந்து ஆண்தன்மையற்ற திழவர்போல் மயங்கி நிற்கும் புருஷர்களும், வாதாதி மூலக தோஷத்தால் உஷ்ணமுண்டாகிப் பிரமேக வெட்டைச் சூட்டால் இந்திரியம் ஜலம்போல் நீர்த்துப் போகத்தில் சீக்கிரம் ஸ்கலிதமாவோரும் நித்திரையில் ஸ்கலிதமுடையோரும், சுரம் மேகம் விஷப்பாண்டு முதலிய வியாதிகளால் இரத்தங் குறைந்து தாது பலஹீனப்பட்டு நரம்புகள் தளர்ந்து பசிமந்தம், மலச்சிக்கல், இடுப்புவலி, கைகாலசதி முதலிய வியாதிகளால் வருந்துவோரும் மனோதத்துவ யுக்தியானதான வக்கீல்கள், குமாஸ்தாக்கள் முதலியோரும் மற்றைய வேலையில் சிரத்தையுடையோரும் உபயோகித்தால் உற்சாக சந்தோஷமடைவார்கள். புதிய மெனிபுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலங்களைப் பெறுவார்கள். சதாகாலம் இந்திரிய ஸ்தம்பன மில்லாது போகத்தில் சீக்கிர ஸ்கலிதமுடையோருக்கு இது ஒரு இணையற்ற பரமசஞ்சீவியாகும். மருவலட்சுமி சாஸ்திரிகளுடன்கூடித் தங்கள் பூரண ஆசையை நிறைவேற்றுது சஞ்சலிக்கும் புருஷர்களுக்குச் சித்தானந்த உற்சாகத்தைக் கொடுப்பதில் பேர்பெற்றது. டீரீட்மைசெய்யும் நண்பர்களுக்குப் பலனைக் கொடுக்கத்தக்கது. இந்த லேகியம் சாப்பிடும் விபரம் நோட்டீஸ் மருந்துடன் அனுப்பப்படும். அதிற் கண்டபடி சாப்பிடவும். இந்த மெடல்பெற்ற சிட்டுக்குருவிச் சத்தின் லேகியம் சாப்பிட்டுக் குணமில்லையென்று சத்தியமாய்ச் சொன்னால் அவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூபா 1000 இனும் கொடுக்கப்படும். ஓர் தடவை டீரீட்மைசெய்யவும்.

40 நாள்	16 பலம்	டப்பி 1-க்கு	விலை	ரூபா	10—0—0.
20 „	8	„ 1-க்கு	„	ரூபா	5—0—0.
10 „	5	„ 1-க்கு	„	ரூபா	2—8—0.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

☞ இந்தலேகியத்துக்கு ஆடர்செய்யும்பொழுது இந்தப்பேப்பர்ப்பெயரைக்குறித்து எழுதவும்.

☞ பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், குவாலாலம்பூர், பேரா முதலிய பிறதேச வாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜ் ரூபா 2-0-0 யும் சேர்த்து முற்பண மனுப்பி மருந்து பெறவேண்டும். வெயூரார் வி. பி யில் அனுப்பும்படி எழுதுங் கடிதங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா. விலாசம் தெளிவாய் எழுதவும். வியாபாரிகளுக்கு 100-க்கு ரூபா 10 வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

எமது விலாசம்:—
எம். சுல்தான் அப்துல்காதர்,
சுல்தானியா வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை,
தென்னார்க்காடு ஜில்லா.

எமது சிலோன் ஏஜெண்டுகள்:—
T. D. மதுரைநாயகம் அன் கோ.,
ஞானசுந்தர வைத்தியசாலை,
நெம். 81, செட்டித்தெரு,
கொழும்பு.

(M. 8)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva prakasa Press, Jaffna.